Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | மார்கழி 08 | (23-12-1992) | புதன்கிழமை | ஓசை 309

## மாணவர் தலைவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி

வட கிழக்குப் பகுதி பாடசாலைகளின் மாணவதலைவர்களிற்கென தலைமைத்துவப் பயிற்சித் திட்டமொன்று அமுல்படுத்தப்படவிருக்கிறது. இப் பயிற்சித் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சு எடுத்து வருகின்றது. மாணவர்களின் மத்தியில் ஆளுமை தலைமைத்துவப் பண்பு, ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகியவற்றை விருத்திசெய்யும் நோக்குடன் மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது. ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 13 வரையிலான மாணவர் தலைவர்களுக்கென இப்பயிற்சித்திட்டம் நடைமுறைப் (3 ஆம் பக்கம் பார்க்க)

# பாராளு. தெரிவுகுழுவிலிருந்து தொண்டமான் விலகினார்

## வட-கிழக்கு பிரிப்பிற்கு எதிர்ப்பாம்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கென நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிலிருந்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் விலக முடிவு செய்துள்ளது- இது தொடர்பாக தெரிவுக் குழுவின் தலைவர் மங்கள முன சிங்காவிற்கு அமைச்சர் தொண்டமான் எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவுக் குழுவின் முடிவு தமிழ்மக்களுக்கு அநீதி இழைத்துள்ளதாகவும், வடக்கு-கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாத எந்தவித தீர்வும் ஏற்றுக்கொள்ளக் கூடியது அல்ல எனவும குறிப்பிட்டுள்ளதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

சற்று காரசாரமான முறையில் எழுதப்பட்டுள்ள இக்கடிதத்தில் தெரிவுக்குழுவின் முடிவு தமிழ் மக்களின் அபிலாசைகளை உடைத்து விட்டது எனவும், தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினையை விளங்கிக் கொள்ளாது தவறான முறையில் தீர்வுகாண முற்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ள தொண்டமான் பிரச்சினையை அவ்வாறு தீர்க்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னுடைய திட்டமும் தெரிவுக் குழுவின் திட்டமும் முற்றிலும் வேறுபாடானவை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள தொண்டமான், தமிழரின் உரிமைகள் வழங்கப்பட வேண்டுமானால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும். பிரச்சினையின் ஆரம்பபடியே இணைப்புத்தான். இணைப்பில்லா எந்தத் தீர்வும் தமிழ் மக்களுக்கு நன்மை பயக்காது எனக் குறிப்பிட்டுள்ளதோடு, தெரிவுக்குழு தெரிவித்துள்ள யோசனையினால் பிரச்சினை தீராது இன்னும் நீண்டு கொண்டு செல்வதாகவே அமையும் எனவும் அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளார்.

## புலிகளின்நிலை சரியானதென உணர்த்தும் தெரிவுக்குழுமுடிவு

(லண்டன்)

தெரிவுக்குழுவின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளின் வழியே சரியானது என நினைக்க வைக்கின்றதுஎன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வு குறித்து பி.பி ஸி செய்தி ஆய்வாளர் கிறிஸ் மோரிஸ் தனது விமர்சனத்தில் தெரிவித்தார்.

அரசின் ஆதரவுடன் நடந்த வன்முறைகளாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தாலும் தமிழ் அரசியல் [illegible] தெரியவில்லை. இந்த நிலையில் தமிழர்களுக்கு திருப்தி ஏற்படுத்த ஒரே வழி வடக்கையும் கிழக்கையும் இணைத்த சமஷ்டி அமைப்புத்தான்.

ஆனால் சிங்களபெரும்பான்மையினரின் வாக்குகளைஎதிர்பார்த்திருக்கும் எந்த ஒரு அரசியல்வாதிக்கும் சமஷ்டி என்னும் சொல் கசப்பாகவே இருக்கிறது. புத்தமதகுருமார்கள் பெரும்பாலும் தொடர்பான கடும்கோட்பாளர்கள்சமஷ்டிக் கருத்திற்கு எதிராக தேசிய அளவில்வெறுப்புணர்வை ஏற்படுத்தி விட்டார்கள்,

தெரிவுக்குழுவின்செயற்பாடு விடுதலைப் புலிகளின் தரப்பினரை அவர்களின் வழியே சரியானது என நினைக்க வைத்திருக்கிறது.1987 ஒப்பந்தத்தைவிட மிகக்குறைந்தளவு அதிகாரங்களையே தெரிவுக் [3 ஆம் பக்கம் பார்க்க]

## காலி கடற்பரப்பில் மர்மக் கப்பல்

(காலி)

கொஸ்கொடவுக்கு நாலு மைல்களுக்கு அப்பால் கடலில் மர்மக் கப்பல் ஒன்று நிற்கக் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தக் கப்பலை நெருங்க மீனவர்களும், பொது மக்களும் அஞ்சியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. மர்மக் கப்பல் சிறிலங்கா கடல் எல்லைக்குள் நுழைந்த காரணம் குறித்துப் பலர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

### கிளான்சி பெர்னாண்டோ மரணம்

## விசாரணை கமிஷன் அமைக்க கோரிக்கை

(கொழும்பு)

முன்னாள் கடற்படை தளபதி அட்மிரல் கிளான்சி பெர்னாண்டோ மரணம் தொடர்பாக உயர்மட்ட விசாரணை கமிஷன் ஒன்றை அமைக்குமாறு அவருக்கு நெருக்கமானவர்கள் வேண்டுகோள் விடுக்க உள்ளார்கள்.

அராலித்துறை கண்ணிவெடி சம்பவத்திற்கு அமைத்ததுபோல் தனிநபர் கமிஷன் அமைக்க கூடாது என்றும் திறந்த விசாரணையே மேற்கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடப்பட உள்ளது.

தனிநபர் கமிஷனை விரும்பத்தகாதது என்றும் கமிஷனுக்கு பல அங்கத்தவர்கள் இருப்பது விரும்பதகும் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன.

### தொழிற்பயிற்சி பெறச் சென்ற

## 9 பெண்கள் உட்பட 10 பேர் தெகிவளையில் கைது

பனை அபிவிருத்தி சபை தொழில் பயிற்சி பெற சென்ற வடக்கு-கிழக்கைச்சேர்ந்த ஒன்பது பெண்களும், ஒரு ஆணும் தெகிவளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் இருந்து அதிக எண்ணிக்கையானவர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர். தெகிவளை கல்வல வீதியில் அமைந்திருந்த பனைவள அபிவிருத்தி சபையின் சிறுகைத் தொழில் பிரிவில் நடைபெற்ற கண்காட்சியில் இருந்து வீடு திரும்பும்போது இரவு 8 00 மணி அளவில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாகப் பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் பயன் தரவில்லை என்றும் கைதானவர்கள் பற்றிய தகவல்கள் பெற முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## உரவகை குறைகிறது

[யாழ்ப்பாணம்]

''கெயர்ஸ்'' தாபனத்திற்கு என கொழும்பிலிருந்து மெரினால் கப்பலில் அனுப்பிவைக்கப்பட்ட உரவகைகளில் 80 மெற்றிக் தொன் உரத்திற்கு என்ன நடந்தது என்பது இதுவரை தெரியவில்லை.

''கெயர்ஸ்'' தாபனத்திற்கு 541.5 மெற்றிக் தொன் உரம் கொழும்பிலிருந்து அனுப்பி வைக்கப்பட்டதாகவும், ஆனால் நேற்றுப் பருத்தித் (3ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் மீட்பு நிதி சேகரிப்பு

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வரும் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை கரவெட்டி. பருத்தித்துறை,வடமராட்சிகிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நெல்லியடி மத்தியமகா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

# இரண்டு வருடம் போரிடுவதற்கான

### கழிவு வாய்க்காலில்

## தெகிவளையில் கைது

பனை அபிவிருத்தி சபை தொழில் பயிற்சி பெற சென்ற வடக்கு-கிழக்கைச் சேர்ந்த ஒன்பது பெண்களும், ஒரு ஆணும் தெகிவளை பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு-கிழக்கில் இருந்து அதிக எண்ணிக்கையானவர்கள் இந்தப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர். தெகிவளை கல்வல வீதியில் அமைந்திருந்த பனைவள அபிவிருத்தி சபையின் சிறுகைத் தொழில் பிரிவில் நடைபெற்ற கண்காட்சியில் இருந்து வீடு திரும்பும்போது இரவு 8 00 மணி அளவில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களின் விடுதலை தொடர்பாகப் பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் பல முயற்சிகளை மேற்கொண்ட போதும் பயன் தரவில்லை என்றும் கைதானவர்கள் பற்றிய தகவலைப் பெற முடியவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## வடமராட்சியில் மீட்பு நிதி சேகரிப்பு

உதவி அரசாங்க அதிபர் பிரிவு ரீதியாக இடம்பெற்று வரும் தமிழீழ மீட்பு நிதி சேகரிப்பு எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை கரவெட்டி, பருத்தித்துறை, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இடம் பெறும்.

எனவும், தமிழ் மக்களுக்கு உள்ள பிரச்சினையை விளங்கிக் கொள்ளாது தவறான முறையில் தீர்வுகாண முற்பட்டுள்ளதெனவும் தெரிவித்துள்ள தொண்டமான் பிரச்சினையை அவ்வாறு தீர்க்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தன்னுடைய திட்டமும் தெரிவுக் குழுவின் திட்டமும் முற்றிலும் வேறுபாடானவை என்பதைச் சுட்டிக் காட்டியுள்ள தொண்டமான், தமிழரின் உரிமைகள் வழங்கப்

# இரண்டு வருடம் போரிடுவதற்கான ஆயுதங்கள் கைவசம் உள்ளன

## மூன்று ஹெலிகளும் வாங்க முடிவு
### அமைச்சர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

இராணுவத்திடம் இரண்டு வருடங்களுக்குப் போதுமான வெடி மருந்தும், யுத்த தளபாடங்களும் கையிருப்பில் உள்ளன. ஆனையிறவு, வெற்றிலைக்கேணியில் உபயோகித்தது போன்று உடயோகித்தாலும் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ள இராணுவத் தளபாடங்கள் இரண்டு வருடங்களுக்குப் போதுமானவை இத்தகவலை விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா தெரிவித்தார்.

கடந்த 16ம் திகதி சிறிலங்கா பாராளுமன்றத்தில் இடம் பெற்ற அவசரகாலசட்டவிவாதத்தில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வெற்றிலைக்கேணிக்கும், ஆனையிறவுக்கும், பூநகரிக்கும் இடையில் படைகளையும், இராணுவத் தளபாடங்களையும் ஏற்றி இறக்க அரசு மேலும் மூன்று ஹெலிகொப்டர்களை வாங்கவுள்ளது.

கடந்த இரு வருடங்களில் மொத்தம் இரண்டு டசினுக்கு மேற்பட்ட விமானங்கள், ஹெலிகொப்டர்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. பெருபளவு 130 மி. மீ. நீண்ட வீச்சுக் கொண்ட ஆட்லெறி எறிகணை செலுத்திகள், கனரக, மென்ரக யுத்த டாங்கிகள், கவசவாகனங்கள், தரையிறங்கும் படகுகள், பீரங்கிப் படகுகள், அதிவேக தாக்குதல் படகுகள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

துப்பாக்கிகளைப்பொறுத்தவரை இப்பொழுதுள்ள படையினருக்கு மட்டுமன்றி எதிர்காலத்தில் சேர்க்கப்படுபவர்களுக்கும் வழங்கக் கூடியளவு எபமிடம் உள்ளன.

எனவே எம்மிடம் தேவையான கனரக ஆயுதங்களும் ஏனையவைகளும் உள்ளன.

தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை, ஊர்காவற் படை என்பவற்றில் மொத்தம் ஒரு இலட்சத்து இருபத்தொன்பதினாயிரம் பேரும் பொலிஸ் படையில் ஐம்பத்தேழாயிரம் பேருமாக மொத்தம் ஒரு லட்சத்து எண்பதாறாயிரம் பேர் அங்கம் வகிக்கின்றனர்.

தொலைத்தொடர்புகளென 15 மில்லியன் ரூபா செலவில் 600 தொலைத்தொடர்பு சாதனங்கள் இவ் வருட முடிவிற்குள் வாங்கப்படவுள்ளன.

(3 ஆம் பக்கம் பார்க்க)

## இறந்த படைவீரர் பிள்ளைகளுக்கு வேலை

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தின் போது கொல்லப்பட்ட அல்லது ஊனமுற்ற இராணுவத்தினரது பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

பாதுகாப்பு ஆபத்துச் சேவைப் பிரிவு இதற்கான முயற்சியில் இறங்கியிருக்கிறது. ஏற்கனவே இப்பிரிவு இவ்வாறான ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

## ஆண்டு 6 அனுமதி 26இல் போட்டிப் பரீட்சை

தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கான ஆண்டு 6 அனுமதிக்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாணவர்கள் விண்ணப்பித்த பாடசாலைகளில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நானாட்டான் தாக்குதலில்

## பலியான படையினர் 14 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

மன்னார் நானாட்டான் சிங்கள இராணுவக்காவலரண் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் எண்ணிக்கை 14 ஆக உயர்ந்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை 21 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற இத்தாக்குதலில் காயமடைந்தோர் பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

## கிளாலி போக்குவரத்தில் தடங்கல்

(யாழ்ப்பாணம்)

கிளாலி ஊடான போக்குவரத்து நேற்று மீண்டும் தடைப்பட்டது.

நேற்றைய தினம் சிறிலங்கா கடற்படையினரின் நடமாட்டம் அதிகரித்துக் காணப்பட்டதைத் தொடர்ந்தே அச்சம் காரணமாகப் படகுச் சேவை இடம் பெறவில்லை எனத் தெரிய வருகிறது.

இதனால் கொழும்பு மற்றும் பிறமாவட்டங்களுக்கு என குடாநாட்டிலிருந்து சென்ற நூற்றுக் கணக்கான பொது மக்கள் திரும்பி வந்ததை அவதானிக்க முடிந்தது.

# புலிகளின் நிலை சரியானதென உணர்த்தும் தெரிவுக்குழு முடிவு

(லண்டன்)

தெரிவுக்குழுவின் நிலைப்பாடு விடுதலைப் புலிகளின் வழியே சரியானது என நினைக்க வைக்கின்றதுஎன்று பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தீர்வு குறித்து பி.பி.ஸி செய்தி ஆய்வாளர் கிறிஸ் மோரிஸ் தனது விமர்சனத்தில் தெரிவித்தார்.

அரசின் ஆதரவுடன் நடந்த வன்முறைகளாலும் தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டத்தாலும் தமிழ் அரசியல் கடந்த பத்து ஆண்டுகளில் ஒரு தீவிர புரட்சி ஆகிவிட்டிருப்பதை இந்த ஆலோசனை கருத்திற்கொள்ளவில்லை.

சிறிலங்கா ராணுவம் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டு தீர்வை ஏற்படுத்துவது இயலுகின்ற செயலாகத் தெரியவில்லை. இந்த நிலையில் தமிழர்களுக்கு திருப்தி ஏற்படுத்த ஒரே வழி வடக்கையும் கிழக்கையும் இணைத்த சமஷ்டி அமைப்புத்தான்.

ஆனால் சிங்களபெரும்பான்மையினரின் வாக்குகளை எதிர்பார்த்திருக்கும் எந்த ஒரு அரசியல்வாதிக்கும் சமஷ்டி என்னும் சொல் கசப்பாகவே இருக்கிறது. புத்தமதகுருமார்கள் பெரும்பாலும் தொடர்பான கடும்கோட்பாளர்கள் சமஷ்டிக் கருத்திற்கு எதிராக தேசிய அளவில் வெறுப்புணர்வை ஏற்படுத்தி விட்டார்கள்,

தெரிவுக்குழுவின் செயற்பாடு விடுதலைப் புலிகளின் தரப்பினரை அவர்களின் வழியே சரியானது என நினைக்க வைத்திருக்கிறது. 1987 ஒப்பந்தத்தைவிட மிகக்குறைந்தளவு அதிகாரங்களையே தெரிவுக்

[3 ஆம் பக்கம் பார்க்க]

## கழிவு வாய்க்காலில் பெண்ணின் சடலம்

(யாழ்ப்பாணம்)

இளம் குடும்பப் பெண் ஒருவர் சடலம் கழிவு வாய்க்கால் ஒன்றிலிருந்து நேற்று மீட்கப்பட்டது. நேற்றுக் காலை பொது மக்கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் துறையினர் சடலத்தை மீட்டு யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்,

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் சுலோசனா பீதாம்பரம் (வயது 30) என தெரிய வந்துள்ளது.

கோகிலா கண்டி சாவகச்சேரியைச் சேர்ந்த இவ் இளம் குடும்பப் பெண்ணின் மரணம் குறித்துப் பல சந்தேகங்கள் எழுந்துள்ளன. இவரது மரணத்திற்கான காரணங்கள் குறித்துக் காவல்துறையினர் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## கொழும்பு துறைமுகத்தில் கப்பல் கவிழ்ந்தது

(கொழும்பு)

கொழும்பு துறைமுகத்தில் இறப்பரை ஏற்றிக்கொண்டிருந்த கப்பலொன்று நேற்றுக் கவிழ்ந்தது இந்தக் கப்பல் எதியோப்பியாவை நோக்கிப் புறப்படவிருந்தது பெரோஸ் எனப்படும் 720 தொன் எடையுள்ள இக்கப்பலுக்கு இரண்டு தினங்களாக இறபர் ஏற்றப்பட்டது.

இப்பொதிகள் பாதுகாப்பாக கட்டப்படாமையால் நீர்உட்புகுந்து கப்பல் சரிந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. கப்பலில் இருந்த 20 மாலுமிகளும் உயிர் தப்பினர்.

இவ்விபத்து பற்றி விசாரிக்க குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

# தமிழக அரசு கலைக்கப்படும்? செய்தியை அடுத்து வன்முறை

(சென்னை)

தமிழ் நாட்டில் ஆட்சி செய்யும் அ. தி. மு. க அரசாங்கம் கலைக்கப்படலாம் என தமிழகத்தில் பெரும் வதந்திகள் பரவியுள்ளதை தொடர்ந்து அ. தி மு க. தொண்டர்கள் வன்முறையில் இறங்கியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

செகந்திரா பாத்திலிருந்து இராணுவம் தமிழ்நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. மாநில ஆளுனர் பீஷ்ம நாராயண சிங் குடியரசுத் தலைவர் சங்கர் தயாள் சர்மா, பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆகியோரை சந்திக்கும்படி டில்லிக்கு அழைக்கப்பட்டிருப்பதும், நல்லாட்சி இயக்கத்தினர் மீது அ. இ. அ. தி. மு. கவினர் நடாத்தும் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதும் ஜெயலலிதா ஆட்சி கலைக்கப்படலாம் என்ற வதந்திக்கு வழிவகுத்துள்ளன.

இதேவேளை மாநிலத்தின் பலபகுதிகளில் அ. இ. அ. தி. மு. கவினர் நேற்று கடைகளை மூடும்படி செய்தனர். பஸ்கள் மீது கற்கள் எறிந்துகலாட்டா செய்தனர்.

மேலும் பாரதீய ஜனதா கட்சி பாராளுமன்றத்தில் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக பேசியுள்ளது எனினும் எதிர்த்து வாக்களித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தடைசெய்யப்பட்ட அமைப்புகளின்

## இந்துமத தலைவர்களுக்கு தமிழக அரசு புகலிடம்

தமிழ் நாடு மாநிலம் தடை செய்யப்பட்ட ஆர். எஸ். எஸ். விஷ்வ ஹிந்துப்பரிஷத் ஆகிய இயக்கங்களின் தலைவர்களுக்கு புகலிடம் கொடுப்பது பற்றி இந்திய மத்திய அரசு கவலை தெரிவித்துள்ளது.

டில்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாட்டு குழுக் கூட்டத்தில் ஜெயலலிதா பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஆதரவாக பேசியமை தெரிந்ததே.

இதேவேளை விஷ்வஹிந்து பரிஷத் தனது அடுத்த மதக் கூட்டத்தை இராமேஸ்வரத்தில் நடாத்த உள்ளது இதில் அயோத்தியில் இராமர் கோயில் கட்டுவதில் பங்கு பற்றிய விஷ்வஹிந்துப் பரிஷத் தலைவர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

## வரி விளம்பரம்

### கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி). மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284 ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி. (சி-5588)

### தேவை

பாடல்கள் ஒலிப்பதிவு செய்வதில் அனுபவமுள்ளவர்களும், T V. வீடியோ டெக் திருத்துவதில் அனுபவமுள்ளவர்களும் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும். தொடர்பு: "நியூ விக்ரேஸ் எலக்ரோனிக்கொம்பிளெக்ஸ்" B.M C ஒழுங்கை மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (3238)

### சோதிடர்

உங்கள் கல்வி, நோய், உத்தியோகம், தொழில், விவாகம், வெளியூர் பயணம், ஜாதகம் எழுத, பெயர் வைக்க வேலணை சோதிடர், V. A. சிவராசா, 152B அரசடி றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். (3835)

### சவுக்கம்மரக்கன்று

சவுக்கம் கன்று தேவையானோர் கன்று ஒன்றுக்கு பத்துப் பால்மா வெற்றுப் பக்கற்றுகள் தந்து பெற்றுக் கொள்ளலாம். 'மில்க்வைற்'. (5236)

### காணவில்லை

இரஞ்சினிதேவியையும் அவரது இரு சிறு பிள்ளைகளையும் கடந்த இரு மாதங்

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



| பிறப்பு : | வீரச்சாவு: |
|---|---|
| 05 | 23 |
| — | — |
| 12 | 11 |
| — | — |
| 1972 | 1992 |

### 2ஆம் லெப். விஜிதா
(அந்தோனிப்பிள்ளை மேரிமெல்டா மஞ்சுளா)

23-11-92 அன்று பலாலி பிரதான இராணுவ முகாமின் கிழக்கு காவலரண்கள் தகர்ப்பின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 2ஆம் லெப். விஜிதாவுக்கும் கூட வீரச்சாவை தழுவிக்கொண்ட சக போராளிகளுக்கும் 31ஆம் நாளை நினைவு கூருகின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா, அத்தான்,
வடமராட்சி கிழக்கு அண்ணா, தம்பிமார், தங்கைமார்.
வெற்றிலைக்கேணி, (3819)

## 31-ம் நாள் நினைவலைகள்



| தமிழ் மண்ணில்: | தமிழர் மனத்தில்: |
|---|---|
| 21 | 23 |
| \| | \| |
| 06 | 11 |
| \| | \| |
| 1966 | 1992 |

### மேஜர் தமிழரசன் (டொச்சன்)
[கந்தசாமி ஜெயக்குமார்]
புன்னாலைக்கட்டுவன் வடக்கு

களத்திலே புயலெனப் புலியாய் எழுந்தாய் - எம்
உளத்திலே புன்னகையுடன் பூவாய் மலர்ந்தாய்!
கொள்ளை அன்புகொண்டு நீ எம்முடன் பேசிய
இன்னுள மொழிகள் எம் இதயத்திலே
உதயசூரியனாய் உருவெடுத்து வருகின்றன!...எம்
நெஞ்சததில் நிறைந்தவனே! - உன் அன்பு
நெஞ்சத்தின் மீது நஞ்சைக் கட்டினாயோ தமிழ்காக்க
காலன் செய்த ஜாலத்தினால் எம்மை - இக்
கோலத்தில் விட்டுச் சென்றாயோ? - இந்த
ஞாலத்தில் அழியாத நாயகனே! - எங்கள்

## மருந்திற்காக சென்ற நால்வர் பொலிசாரால் கைது
### - தொம்பே ஆஸ்பத்திரியில் சம்பவம்

ஆஸ்பத்திரிக்கு மருந்து எடுக்கச் சென்ற நான்கு தமிழர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தொம்பே ஆஸ்பத்திரியில் இடம் பெற்ற மேற்படி கைதையடுத்து மேலும் பல இடங்களைப் பொலிசார் சுற்றி வளைத்து சோதனை நடத்துவதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை தொணியகல பகுதியில் தோட்டங்களுக்குள் வெளியார் ஊடுருவுவதை தடுக்கும் நோக்குடன் பொலிசார் தீவிர கண்காணிப்பு மேற்கொண்டிருப்பதாகவும், இதனால் தோட்டத் தொழிலாளர்களின் நண்பர்கள் மறறும் உறவினர்கள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கியிருப்பதாகவும் தெரியவருறது


### தென்னிந்தியத் திருச்சபை யாழ்பேராயம்
நகர்ப்பணி யாழ்ப்பாணம்

### நத்தார் புதுவருட நிகழ்ச்சிகள்

24-12-92 வியாழன் இரவு 11.30
நத்தார் ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: மகாகனம்
டி. ஜே. அம்பலவாணர்

25-12 92 வெள்ளி காலை 8.00
நத்தார் ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: கனம் டி.ஆர். அம்பலவாணர்

31-12-92 வியாழன் இரவு 11.30
விழிப்பிரிவு ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: கனம் ஜி. டி.ஆனந்தராஜன்

01-01-93 வெள்ளி காலை 8 00
புதுவருட ஆராதனையும், திருவிருந்தும்
நடத்துபவர்: கனம் டி. எஸ். தியாகராஜா

03-01-93 ஞாயிறு காலை 8.00
உடன்படிக்கை ஆராதனையும், திருவிருந்து
ஆராதனையும், திடப்படுத்தல் ஆராதனையும்
நடத்துபவர்: மகாகனம்
டி. ஜே. அம்பலவாணர்

(3237)

41, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.


## 2-ம் வருட நினைவஞ்சலி



### வீரவேங்கை மித்திரன்
[செல்வநாதன் பெனடிற்குமார் (சண்முகம்)]
பிறப்பு : 25 - 12 - 75 இறப்பு : 23 - 12 -90

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-23

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு. வந்தாறு மூலைப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினரின் துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். சகாதேவன் (தர்மலிங்கம் கோகுலநாதன் - மகிழடித்தீவு, கொக்கட்டிச்சோலை - மட்டக்களப்பு)

1986 ஆம் ஆண்டு மட்டு. குருமண்வெளிப் பகுதியில் சிறிலங்கா அதிரடிப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். கோபு (சபாரத்தினம் - கல்லடி, மட்டக்களப்பு)

2-ம் லெப். கிருஷ்ணா (தேவசகாயம் -பாலையடி வெட்டை - மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு உரும்பராய்ப் பகுதியில் இந்தியப் படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

பஞ்சன் (கணபதிப்பிள்ளை பஞ்சாட்சரலிங்கம் - நீர்வேலி வடக்கு - யாழ்.)

நிதி (சிவமனோகரி இராசலிங்கம் - இடைக்காடு, அச்சுவேலி - யாழ்.)

மேஜர் முரளி (வேலுப்பிள்ளை இரட்ணசிங்கம் - சர்வோதய வீதி, ஆவரங்கால் - யாழ்.)

கப்டன் காந்தி (கனகரத்தினம் செல்வகுமார் - 82/4 செல்வகுமார் வீதி, கொழும்புத்துறை - யாழ் )

அமுதன் (செல்வராசா அமுதன் - 'பதுமம்', புதிய செம்மணி வீதி, நல்லூர் வடக்கு -யாழ்.)

லெப். தர்சினி (ரஞ்சினிதேவி சிவசுப்பிரமணியம் - சேமமடு, ஓமந்தை - வவுனியா)

நிகிந்தா (பிறேமலதா பாலசுந்தரம் - சாவகச்சேரி - யாழ்.)

சதா (செல்வராணி சிதம்பரப்பிள்ளை - 3-ம் வட்டாரம், முள்ளியவளை - முல்லைத்தீவு)

நிர்மலா (டொறின் அஜந்தி அன்ட்றூ - தேவாலய வீதி, சுண்டுக்குளி, யாழ்.)

நிரா (விநாயகமூர்த்தி நிராகரன் - கோப்பாய் - யாழ்.)

1988 ஆம் ஆண்டு பரந்தன் 40 அடிப்பாலத்தில், இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

உங்கு / சுதா (காசிநாதன் ஜெயகாந்தன் - கோரக்கன்கட்டு - கிளிநொச்சி)

காங்கேசன்துறையில் இந்தியப் படையினர் மற்றும் தேசவிரோதிகளின் சுற்றிவளைப்பில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

கப்டன் அன்பு (பத்திநாதர் அமலராஜன் - மயிலிட்டி)

காரைநகர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

கப்டன் இன்சூர் (கணநாதர் குணநாதன் - குமாரபதி, சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை மேற்கு - யாழ்.)

தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளரான -

தயா (அருச்சுணன் ஜெயதாசன் - மானிப்பாய் யாழ்.)

கிளிநொச்சியில், தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட முறிப்புவீதி. இ. போ. ச உணவுச்சாலை உரிமையாளரான யாழ். சங்கானை வாசியான தமிழ்ப் பொது மகன்.

1989ஆம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப்பகுதியில், தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

தீயன் (அம்பாறை)

ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

தாமு அண்ணாச்சி (சின்னத்தம்பி ரணசிங்கம் -

ஜாதகம் எழுத, பெயர் வைக்க வேலணை சோதிடர், V. A. சிவராசா, 152B அரசடி றோட், கந்தர் மடம், யாழ்ப்பாணம். (3835)

## சவுக்கம்மரக்கன்று

சவுக்கம் கன்று தேவையானோர் கன்று ஒன்றுக்கு பத்துப் பால்மா வெற்றுப் பக்கற்றுகள் தந்து பெற்றுக்கொள்ளலாம். 'மில்க்வைற்'. (5236)

## காணவில்லை

இரஞ்சினிதேவியையும் அவரது இரு சிறு பிள்ளைகளையும் கடந்த இரு மாதங்களாகக் காணவில்லை இவர்களைக் கண்டவர்கள் அண்மையிலுள்ள காவல் துறைக்கோ அல்லது உடுவில் கிழக்கிலுள்ள அண்ணா சன சமூக நிலையத்திற்கோ அறிவிக்கவும். தகவல்: இ. சின்னம்மா (தாய்) உடுவில் (3838)



1966 1992

## மேஜர் தமிழரசன் (டொச்சன்)

[கந்தசாமி ஜெயக்குமார்]

புன்னாலைக்கட்டுவன் வடக்கு

களத்திலே புயலெனப் புலியாய் எழுந்தாய் - எம்
உளத்திலே புன்னகையுடன் பூவாய் மலர்ந்தாய்!
கொள்ளை அன்புகொண்டு நீ எம்முடன் பேசிய
கிள்ளை மொழிகள் எம் இதயத்திலே
உதயசூரியனாய் உருவெடுத்து வருகின்றன!...எம்
நெஞ்சத்தில் நிறைந்தவனே! - உன் அன்பு
நெஞ்சத்தின் மீது நஞ்சைக் கட்டினாயோ தமிழ்காக்க
காலன் செய்த ஜாலத்தினால் எம்மை - இக்
கோலத்தில் விட்டுச் சென்றாயோ? - இந்த
ஞாலத்தில் அழியாத நாயகனே! - எங்கள்
துயர்துடைக்கத் துள்ளி ஓடிவராயோ?
தூயவனே தமிழரசா!...
துடிக்கின்றோம் நின் திருமுகம் காணவே!...

வயாவிளான் ரீச்சர்
- குடும்பத்தினர்

நாவலடிலேன்,
திருநெல்வேலி.
(3834)



## வீரவேங்கை மித்திரன்

[செல்வநாதன் பெனடிற்குமார் (சண்முகம்)]

பிறப்பு: 25 - 12 - 75 இறப்பு: 23 - 12 -90

இரண்டாண்டுகள்சென்றும் உன் உருவம் இனிக்கிறது;
இருண்ட மண்ணுக்கான உன் தியாகம் என்றும்
மிளிர்கிறது.

உமது பிரிவால் துயருறும்
திரு. திருமதி. எ. செல்வநாதன்
(ஓய்வு ஆசிரியர்)

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (3832)

# கேள்வி அறிவித்தல்

## நீர்ப்பாசனத் திணைக்களம்
## கிளிநொச்சி

பின்வரும் வேலைக்குக் கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலைகள் விபரம் | ஆகக் குறைந்தளவு நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் பதிவுத்தொகை | நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவுத்தொகை | மீளளிக்கக் கூடிய கட்டுப் பணம் | மீளளிக்கப் படாத கட்டுப் பணம் |
|---|---|---|---|---|
| இரணைமடு இடதுகரை வாய்க்காலில் டி. 4இல் வரும் ஆர். பி. பிரதான வாய்க்கால் வீதித் திருத்தம். | 500,000/- | 170,000/- | 300/- | 100/- |

நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ சி. ரி. ஏ, டி) நீர்பாசனத் திணைக்களத்திலும் பதிவுசெய்த ஒப்பந்தகாரர் மாத்திரம் கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

கேள்விப் படிவங்கள் கிளிநொச்சிப் பிராந்திய நீர்ப்பாசனப் பணிப்பாளரிடமிருந்து 01-01-1993 தொடக்கம் 29-01-1993 திகதிவரை வேலை நாட்களில் மு. ப. 9.00 மணியிலிருந்து பி. ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர், கிளிநொச்சிப் பிராந்தியம், கிளிநொச்சி என விலாசமிடப்பட்டு 1 2-1993 திகதி மு. ப 10.00 மணிக்கு முன்பாகக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது இதற்கென பிரதிப் பணிப்பாளர் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி கோரற் பெட்டியிலோ போடப்பட வேண்டும்.

கேள்விப் பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வேலையின் பெயர் கேள்விப் பத்திரம் அடங்கியுள்ள தபால் உறையில் இடது பக்கத்தில் தெளிவாகக் குறிப்பிடப்படவேண்டும்.

17-12-1992
கிளிநொச்சி. (சி-5630)

எந்திரி. ந. நவனேசன்
நீர்ப்பாசன எந்திரி, கிளிநொச்சிப் பிரிவு.

## ஓராண்டு நினைவஞ்சலி

உதயம்:
30-08 1958

❀ ❀ ❀

அஸ்தமனம்:
04-01- 1992



## திருமதி
## பசுபதீஸ்வரசர்மா உஷாதேவி

திதி: 28. 12. 1992

ஆண்டொன்று போனாலும் ஆறாத்துயரமதில்
ஆழ்ந்து கிடக்கின்றார் ஆறுதல் சொல்ல யாருமில்லை
அண்ணா! அண்ணா! என்று ஆர்ப்பரித்த அந்நாளை
ஆவலுடன் எதிர்நோக்கி ஏமாந்து நிற்கின்றேன்
என்மகன் தமிழவன இங்கே அத்தை! அத்தை! என்றழ
நித்தம் நினைநினைந்து மழலை மொழிபொழிகின்றான்
நீங்காத நினைவு கண்டு நின்கணவன் இங்கே நீண்ட
துயரமதில்
நின்றாலும் மீண்டு நீ வருவாய் என்றே ஈண்டு மனம்
ஆறுகின்றார்.

உன்பிரிவால் வாடும்
கணவன்,
சகோதர சகோதரிகள்
அண்ணிமார்

வெள்ளெருவைப்பிள்ளையார்கோவில்
கோப்பாய் வடக்கு,
கோப்பாய் (3827)

லிட்டி)

காரைநகர்ப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய -
கப்டன் இன்சூர் (கணநாதர் குணநாதன் - குமாரபதி, சிவன்கோவிலடி, வட்டுக்கோட்டை மேற்கு - யாழ்.)

தேசவிரோதிகளினால் சுட்டுக்கொல்லப்பட்ட - நாட்டுப்பற்றாளரான -
தயா (அருச்சுணன் ஜெயதாசன் - மானிப்பாய் யாழ்.)

கிளிநொச்சியில், தேசவிரோதிகளால் சுட்டுக்கொல்லப்பட்ட முறிப்புவீதி. இ. போ. ச உணவுச்சாலை உரிமையாளரான யாழ். சங்கானை வாசியான தமிழ்ப் பொது மகன்.

1989ஆம் ஆண்டு உன்னிச்சைக் காட்டுப்பகுதியில், தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -
தியன் (அம்பாறை)

ஆரையம்பதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -
தாமு அண்ணாச்சி (சின்னத்தம்பி ரணசிங்கம் - மட்டு.)

1990 ஆம் ஆண்டு மயிலம்பாவெளி 13-ம் கிராமப் பகுதியில், ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த -
விஜி (காரைதீவு - அம்பாறை)
றிச்சார்ட் (காரைதீவு - அம்பாறை)
மூர்த்தி (இருதயபுரம் - மட்டக்களப்பு)
கதிர் (காரைதீவு - அம்பாறை)

மாவிட்டபுரம் பகுதியில், சிறிலங்காப் படையினரின் எறிகணைத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -
லெப். ராஜன் (சிவஞானசுந்தரம் குகதாசன் - மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கு - யாழ்.)
ஜெறோம் (தர்மராசா சசிக்குமார் - மருத்துவமனை வீதி, சங்கானை யாழ்.)
மித்திரன் (எட்வேட் செல்வநாதன் பெனடிற்குமார் [சண்முகம்] - 'சுவாஞானபதி', பிடாரிகோவிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டை - யாழ்.)
2-ம் லெப். அருண்நேசன் (வல்லிபுரம் பாலேந்திரன் - சரசாலை வடக்கு, சாவகச்சேரி - யாழ்.)

அம்பாறை - 16-ம் கொலனிப் பகுதியில், சிறிலங்காப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -
முகிலன் (வீரமுனை - அம்பாறை)

மட்டு - மண்டூர்ப்பகுதியில் ஆற்றில் மூழ்கியதில் எமைப்பிரிந்த -
அரசன் (ஆலையடி வேம்பு - மட்டக்களப்பு)

மட்டக்களப்பில், இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மட்டு - கொம்மாந்துறை, 10-ம் கட்டை வீதி வாசியான தமிழர்.

மட்டக்களப்பில், இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட சின்ன உப்போடை வீதி வாசியான தமிழர்.

1991-ம் ஆண்டு வவுனியா - சமயபுரம், கோவில் பண்ணைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -
லெப். கிட்லர் / துஷ்யந்தன் (இராசதுரை சிறி விஜயகுமார் - பாவற்குளம் வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/5628)

### சிந்தனைக்கு

சுதந்திரத்தின் இன்பமும், விடுதலையின் ஆறுதலும் உமக்கு வேண்டுமா? விடுதலையின் விலை துன்பமும் தியாகமும்.

— நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம்- 23- 12- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
த. பெ. எண் - 05

## விலை பேச முடியாதது

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களை அழகாக ஏமாற்றியது பாராளுமன்றத் தெரிவுக்குழு. பி. பி. ஸி. விமர்சகர் குறிப்பிட்டது போல் மலையாக நம்பியிருந்தவர்களுக்கு அது மடுவாக அமைந்துவிட்டது.

இவ் அரசியல் சதுரங்கத்தில் தமக்கு கொழும்பில் தரித்துள்ள தமிழ்க் குழுக்கள் எள்ளளவும் நிகரானவர்கள் அல்ல என்பதை சிங்களப் பேரினவாதக் கட்சிகள் தெளிவாக வெளிப்படுத்தின. தமிழ்க் குழுக்கள் தமது தோல்வியை தவிர்க்க முடியாது ஏற்றுக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டுவிட்டது.

தமிழருக்கென ஒரு தனியரசு அமைக்கப் போவதாகக் கூறிக்கொண்ட தமிழ்க்குழுக்கள் இறுதியாக சிங்களப் பேரினவாதத்திடம் சரணாகதி அடைந்தபோது வடக்கு- கிழக்கு இணைந்த சமஷ்டி அமைப்போ, குறைந்தது இந்திய - சிறிலங்கா உடன்படிக்கையின் அடிப்படையிலான வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த மாகாண சபைகளோ கிடைக்கும் என்றோ எதிர்பார்த்திருந்தன என்பதை அவர்களின் கடந்தகால அறிவிப்புக்களே தெரிவித்தன.

ஆனால், தெரிவுக் குழுவில் நடந்த விவாதங்களின் போது பேரினவாத சக்திகள் இம்மியளவும் அசைந்து கொடுக்கவில்லை. தமிழ்க் குழுக்கள் தான் படிப்படியாக படி இறங்கிவந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி சமஷ்டி அமைப்பு முறை, அவை தனித்தனி மாகாண சபைகள் இரண்டையும் இணைக்கும் வகையில் கவர்னர் ஒருவரை நியமித்தல் என தலைக்கொரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். ஆனால், இதனையும் சிங்களப் பேரினவாதிகள் ஏற்கவில்லை.

ஆனால், தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த ஒருவர் - அரசகைக்கூலியாக மாறியவர் என தமிழ்க் குழுக்களாலேயே குற்றம்சாட்டப்படுபவர்-கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஒரு பகுதியை சிங்களப்

# 'புக்காரா' விமானக் கொள்வனவு; அரசாங்கத்தின் அக்கறை ஏன்?

பபிரிக்கா, ஆர்ஜன்ரீனா, டிமற் யல்ஸ், ஏரோன் பசிக்கஒஸ் நிறுவனம் புக்காரா ரக விமானங்களை நான்கு வடிவமைப்புகளில் செய்தது. இதில் ஐ. ஏ. 58 பி. மற்றும் ஐ ஏ. 66 ரகங்கள். அவற்றில் நகல் வடிவமைப்புநிலையில் இருந்து முன்னேற்றமான வடிவமைப்பு நிலையை எட்டவில்லை என்று சர்வதேச பாதுகாப்பு விவரண சஞ்சிகையான ஜேன்ஸ் அதன் அறிக்கையில் கூறுகிறது. ஆக ஐ. ஏ. 58 ஏ, ஐ. ஏ. 58 சி. விமானங்களே வெற்றிகரமான தயாரிப்புகளாகும். இந்த விமானங்களில் முக்கிய ரகமான ஐ. ஏ. 58 புக்காராவிமானங்கள் ஆர்ஜன்ரீனா விமானப்படையில் பாவனையில் உள்ளன.

தீவிரவாதப் போராட்ட எதிர்ப்பு விமானம் என்ற வகையில் ஐ ஏ.58 ஏ, புக்காரா விமானங்களை வேவு பார்க்கும் பணியிலும், மேற்கொள்ளப்படும், தாக்குதலுக்கு உதவியாக மட்டுமே பாவிக்கலாம் என்று ஜேன்ஸ் சஞ்சிகை மதிப்பிடுகிறது. இது இரண்டு இருக்கைகளைக் கொண்ட விமானமாகும். விரல் விட்டு எண்ணக்கூடிய தொகையிலான விமானங்கள் மட்டுமே உருகுவே நாட்டுக்கும், கொலம்பியாவுக்கும் விற்கப்பட்டுள்ளன.

பிரேசிலில் தயாரிக்கப்பட்ட துக்கானா மற்ற நாடுகளில் பெருமளவில் பாவனையில் உள்ளன. இந்த ரகம் தீவிரவாதப் போராட்டத்துக்கு எதிராகத் தரைத்தாக்குதல் மேற்கொள்வதற்குப் பயன் பொருத்தமானது.

புக்காரா ஐ. ஏ 58 ஏயிலும், ஐ.ஏ58 சியிலும் பிரான்சுநாட்டில் தயாரிக்கப்பட்ட இயந்திரங்களே பொருத்தப்பட்டுள்ளன. புக்காரா விவகாரம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டதும், பிரான்சு அரசு சிறிலங்காவுடனான ஆயுத தளபாட வணிகத்தை தடை செய்துவிட்டது என்று பிரதம மந்திரி கருத்து வெளியிட்டார். இக்கூற்றுப் பற்றிக் கட்டுரையாளர் பிரான்சுத் தூதரகத்தில் விசாரித்த போது உத்தியோகப் பற்றற்ற முறையிலோ அல்லது உத்தியோக முறையிலோ சிறிலங்காவுடனான ஆயுத வியாபாரத்துக்கு எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை என்றனர். இந்த ஊகத்தில் எந்தவித உண்மையும் இல்லை என்றும் தெரிவித்தார்.

வெளிநாடுகளுடனான ஆயுத விற்பனைக்கு அனுமதி வழங்குவதற்கு பிரான்ஸ்நாட்டில உயர்மட்ட அதிகாரிகளை அடக்கிய ஆணைக்குழு ஒன்று உள்ளது. ஆயுத தளபாடங்கள் உற்பத்தி செய்யும் எந்த நிறுவனமும் வெளிநாட்டு ஆயுத வியாபாரத்தை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவின் முன் அனுமதியைப் பெறவேண்டும். ஆனால் எந்தப் பிரான்சு நிறுவனமும் கொழும்புக்கு ஆயுதவிற்பனை செய்ய இதுவரை விண்ணப்பிக்க வில்லை என்று அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இதன் பிரகாரம் சிறிலங்கா அரசு எந்தவித ஆயுதங்களையும் பிரான்சிடமிருந்து கொள்வனவு செய்யவில்லை எனத் தெரியவருகிறது.

இங்கிலாந்தின் உயர் ஸ்தானிகர் டேவிட் கிளாட்ஸ்ரோல் வேண்டத்தகாத பேர்வழியாக சிறிலங்காவில் இருந்து வெளியேற்றப்பட்டதை அடுத்துப் பிரித்தானிய அரசு கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் விதித்த தடையால் சிறிலங்கா இராணுவத்தின் கவசவாகனப் பிரிவு மிகவும் பாதிப்புக்குள்ளாகியது. சலாடின் கவச வாகனங்களும் பெரட் சவுட் கார்களும் ஓடும் நிலையில் இருப்பதற்கு பிரித்தானியாவில் உற்பத்தியான உதிரிப்பாகங்கள் அவசியம். இந்த ஆயுதத் தடை இப்பொழுது நீக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து தரமான ஆயுத தளபாடங்களை அரசு கொள்வனவு செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.


ரஷ்யாவிடம் எம். ஐ - 8 ஹெலிகப்டர்கள் கொள்வனவு செய்யும்பேரம் வெற்றிகரமாக முடிந்தால் அடுத்தவருட ஆரம்பத்தில் விமானப் படையின் போக்குவரத்துப் பலமும், அதன் ஆயுத பலமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அரசு இதற்கான கேள்விப் பத்திரங்களைக் கேட்டிருந்தது. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 19 ஆம் திகதியுடன் முடிவடைந்தது. பல நாடுகளில் சுமார் ஐம்பது ரகமான ஹெலிகப்டர்கள் பாவனையில் உள்ளன.

எம். ஐ-8 ஹெலிகப்டர்கள் கொள்வனவு செய்தவுடன் புலிகளின் மீது பாதுகாப்புப் படைகளின் அழுத்தம் அதிகரிக்கும் எனக் கூறப்படுகிறது. புக்காரா விமானங்கள் கேள்விக்குறியாக இருக்கும் இவ்வேளையில் எம். ஐ - 8 இன் 'சாதனை'கள் பற்றி எவரும் கேள்வி கேட்பதாக இல்லை.

ஹிப் என்று நேட்டோ நாடுகளால் அழைக்கப்படும் இந்த ஹெலி உலகின் சிறந்த ஹெலிகப்டராக இன்று அபிவிருத்தி அடைந்துள்ளது. சிறிலங்காவுக்குப் பரிட்சயமில்லாத கிழக்கு ஐரோப்பிய நாட்டுத் தொழில் நுட்பம் ரஷ்ய அல்லது கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்குத் தடையாக அமைந்து விடக் கூடாது என்று சில பாதுகாப்பு ஆய்வாளர் கருதுகின்றனர்.

ரஷ்யா மிக் விமானங்களை சிறிலங்காவிற்கு 1970களில் வழங்கியது. 1977இல் யு. என். பி ஆட்சிக்கு வந்ததும் அரசு இராணுவத் தளபாடங்களுக்கு மேற்கையும், மேற்கு ஆதரவுநாடுகளையும்சீனாவை

(4 ஆம் பக்கம் பார்க்க)



இரு ஆசனங்களைக் கொண்ட புக்காரா - 1 ஏ. 58 ஏ. ரக விமானத்தினதும் ஒற்றை ஆசனத்தைக் கொண்ட புக்காரா - 1 ஏ 58 சி ரக விமானத்தினதும் மாதிரித் தோற்றங்கள்.

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

(3)

### குழந்தைக்கு 6 மாதம் ஆகும்போது

கட்டாயமாக சோறு கொடுக்கத் தொடங்கவேண்டும். ஆண் குழந்தைக்கு ஆறாம் மாதத்திலும் பெண் குழந்தைக்கு ஏழாம் மாதத்திலும் கொடுக்கலாம் என்பதெல்லாம் பழைய காலம். இருவரும் குழந்தைகளே. ஒரே உணவை உண்டுதான் இருவரும் வளர வேண்டும். நன்கு அவித்த அடிப்பானைச் சோறு நல்லது பிசைந்து அல்லது இடியப்ப உரலில் இட்

கலவை, ரஸ்க்ஆகியவற்றைக் கொடுக்கலாம். இவ்வயதில் குழந்தை அவித்த முட்டையில் அரைவாசிக்கு மேல் சாப்பிடக்கூடியதாக இருக்கும். சோற்றுடனும் சேர்க்கலாம். ஆரம்பத்தில் கூறியவாறு தாய்ப்பாலே குழந்தைகளுக்குச் சிறந்த உணவு. எனவே

| வித்தியாசம் | தாய்ப் பால் | பசுப் பால் |
|---|---|---|
| புரதச்சத்து | 0.9% | 3.5 /. |
| கொழுப்புச் சத்து | 3.8% | 3.7% |
| லக்டோசு | 7 0% | 4.8 /. |
| கல்சியம் | 0.033·/. | 0.160·/. |
| பொஸ்பரசு | 0 047·/. | 0.197·/ |

கலாம். இடியப்பம், களி பாண், சோறு, இலை சேர்ந்த பால் கஞ்சி என்பனவற்றையும் கொடுக்கலாம்.

### இலைசேர் பால்கஞ்சி செய்யும் முறை

தேவையான பொருள்கள்

கங்குள்கீரை போன்றவை மாறிமாறிப் பயன்படுத்தலாம். முதலில் அரிசியை நன்கு வேகவைக்கவும் கீரையைச் சுத்தம் செய்தபின்னர் நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டவும் தேங்காயைச் சிறுசிறு பூவாகத் துருவி வைத்துக்கொள்ளலாம். பயறை முதல் நாள் ஊற

சபைகளோ கிடைக்கும் என்றோ எதிர்பார்த்திருந்தன என்பதை அவர்களின் கடந்தகால அறிவிப்புக்களே தெரிவித்தன.

ஆனால், தெரிவுக் குழுவில் நடந்த விவாதங்களின் போது பேரினவாத சக்திகள் இம்மியளவும் அசைந்து கொடுக்கவில்லை. தமிழ்க் குழுக்கள் தான் படிப்படியாக படி இறங்கிவந்து வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி சமஷ்டி அமைப்பு முறை, அவை தனித்தனி மாகாண சபைகள் இரண்டையும் இணைக்கும் வகையில் கவர்னர் ஒருவரை நியமித்தல் என தலைக்கொரு தீர்மானத்தைக் கொண்டு வந்தனர். ஆனால், இதனையும் சிங்களப் பேரினவாதிகள் ஏற்கவில்லை.

ஆனால், தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த ஒருவர் - அரசகைக்கூலியாக மாறியவர் என தமிழ்க் குழுக்களாலேயே குற்றம்சாட்டப்படுபவர்-கொண்டு வந்த தீர்வுத் திட்டத்தின் ஒரு பகுதியைப் பற்றிப் பிடித்துக் கொண்டு ஒரு பகுதியை சிங்களப் பேரினவாதம் நிராகரித்தது. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனி சமஷ்டி அமைப்பு எனக் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தில், வடக்கு - கிழக்கை பிரிப்பது என்பதை மட்டும் எடுத்துக் கொண்ட சிங்கள பேரின வாதிகள், சமஷ்டி என்பதை நிராகரித்தனர்.

ஒரு தமிழ் அரசியல் விமர்சகர் இதுகுறித்து கிண்டலாகப்பேசும் போது குறிப்பிட்டார், ''தமிழ்க் குழுக்கள் முன்வைத்த யோசனையில் ஒரு பகுதியை சிங்கள அரசாங்கம் ஏற்றுக் கொண்டது. மறுபகுதியை நிராகரித்தது. பேச்சுவார்த்தை என்றால் இவ்வாறுதானே இருக்கும். விட்டுக் கொடுப்புக்களும் தேவைதானே. அதாவது தமிழர் முன்வைத்த வடக்கு - கிழக்குப் பிரிவினையை சிங்களவர் ஏற்றுக் கொண்டனர். சமஷ்டியை ஏற்றுக் கொள்ளவில்லை'' அவ்வளவுதான் என்றார்.

இவ்வாறு எண்ணி சிங்களப் பேரினவாதம் தான் மீண்டும் ஒருமுறை அரசியல் சதுரங்கத்தில் ஜெயித்து விட்டதாக கருதிக் கொள்ளக் கூடும். நிர்க்கதியற்ற தமிழ்க்குழுக்களும் தமது தோல்வியை ஒப்புக்கொள்ளக் கூடும். இந்தியாவை நம்பியுள்ள ஒரு சில குழுக்கள் தமது அவலநிலையை, தாம் ஏமாற்றப்பட்டதை தமது எஜமானிடம் எடுத்துக் கூறக்கூடும்.

ஆனால், இவ் அரசியல் சதுரங்கத்தில் தமிழ் மக்களோ அன்றி அவர்களின் பிரதிநிதிகளோ கலந்து கொள்ளவுமில்லை, தோற்கடிக்கப்படவுமில்லை என்பதை சிங்களப் பேரினவாதம் விளங்கிக் கொள்வது நல்லது. தமிழ் மக்களும் அதன் அன்றைய தலைமையும் சிங்களப் பேரினவாதிகளினால் ஏமாற்றப்பட்டதும், அவமானப்பட்டதுமான காலம் மலையேறிவிட்டது.

சிறிலங்கா ஜனாதிபதியின் அரசியல் ஆலோசகர்களில் ஒருவரான அநுருத்த திலகசிறி - டயான் ஜெயத்திலக்கா - பேரினவாதிகளை எச்சரித்திருப்பது போல் ''விடுதலைப்புலிகள் ஜே.வி.பி. யினரைப் போன்றவர்களல்ல. அவர்கள் விவேகம் நிறைந்தவர்களும், அரசியல் தேர்ச்சி மிக்கவர்களும் ஆவர்'' என்பதை பேரினவாதிகள் கவனத்திற் கொள்வதோடு, தமிழ்க் குழுக்கள் போன்று தமிழர்களின் உரிமைகளை விடுதலைப் புலிகள் விலைபேசமாட்டார்கள் என்பதையும் கவனத்திலெடுத்தல் நல்லது.

---

# உணவுப் பற்றாக் குறையும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களும்

(3)

## குழந்தைக்கு 6 மாதம் ஆகும் போது

கட்டாயமாக சோறு கொடுக்கத் தொடங்கவேண்டும், ஆண் குழந்தைக்கு ஆறாம் மாதத்திலும் பெண் குழந்தைக்கு ஏழாம் மாதத்திலும் கொடுக்கலாம் என்பதெல்லாம் பழைய காலம். இருவரும் குழந்தைகளே. ஒரே உணவை உண்டுதான் இருவரும் வளர வேண்டும். நன்கு அவித்த அடிப்பானைச் சோறு நல்லது பிசைந்து அல்லது இடியப்ப உரலில் இட்டும் பிழிந்து கொடுக்கலாம். சூப் தயாரிப்பதற்காக அவித்த மரக்கறிகளையும் சோற்றுடன் சேர்த்துப் பிசைந்து கொடுக்கலாம். அல்லது பருப்பு,கீரை, கிழங்கு, மீன் ஆகியவை மிளகாய் இல்லாமல் அவித்து ஒரு சிறிதளவை குழந்தைகளுக்கு எடுத்து வைத்துவிட்டு பின்பு வீட்டிலுள்ள மற்றையோருக்காக மிளகாயைச் சேர்த்து அவித்துக் கொள்ளலாம் சோற்றைப் பகலில் மதியபோசனமாகக் கொடுக்கலாம், காலையிலும் மாலையிலும் பொரியரிசி மாக் கலவை, ரஸ்க்ஆகியவற்றைக் கொடுக்கலாம். இவ்வயதில் குழந்தை அவித்த முட்டையில் அரைவாசிக்கு மேல் சாப்பிடக்கூடியதாக இருக்கும். சோற்றுடனும் சேர்க்கலாம். ஆரம்பத்தில் கூறியவாறு தாய்ப்பாலே குழந்தைகளுக்குச் சிறந்த உணவு. எனவே தாய்ப்பாலைத் தொடர்ந்து ஒருவயது வரையிலும் கொடுப்பது நல்லது. முடியுமானால் இரண்டு வயதுவரையும் கொடுப்பதும் நல்லது. தாய்ப்பால் குறைந்த குழந்தைகளுக்கு பசுப்பால், மாப்பால் என்பன கொடுக்கலாம். போத்தல் சூப்பி பாவிப்பவர்கள் ஒவ்வொரு முறை குடித்த பின்னரும் அவற்றை நன்கு அவித்து பின்பு கையால் தொடாமல் ஈக்கள், இலையான்கள் மொய்க்காதவாறு மூடிப்பாதுகாக்க வேண்டும். அல்லது பல தொற்றுநோய்கள் இவற்றின் மூலம் பரவும்

| வித்தியாசம் | தாய்ப் பால் | பசுப் பால் |
|---|---|---|
| புரதச்சத்து | 0.9% | 3.5 /. |
| கொழுப்புச் சத்து | 3.8% | 3.7% |
| லக்டோசு | 7 0% | 4.8 /. |
| கல்சியம் | 0.033·/. | 0.160·/. |
| பொஸ்பரசு | 0 047·/. | 0.197·/ |

ஆறு மாதங்களுக்குக் குறைந்த குழந்தைகளுக்கு இரண்டு அவுன்ஸ் (60 மி. லீ) பாலுடன் ஒரு அவுன்ஸ் (30 மி. லீ ) நீர் கலந்து ஒரு தேக்கரண்டி சீனி என்ற அளவில் சேர்த்து நன்கு காய்ச்சி குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். ஆனால் 7ஆம், 8ஆம் மாதங்களுக்குப்பின் குழந்தைகளுக்குப் பசுப்பால் கொடுப்பதானால் நீர் சேர்க்கத் தேவையில்லை 7ஆம்,8ஆம் மாதங்களில் சிறு குழந்தைகளுக்குக் கொடுக்கப்பட்ட உணவுகள் அத்தனையுடன் மேலும் உணவுகள் சேர்த்துக்கொடுக்கலாம். இடியப்பம்,களி பாண், சோறு, இலை சேர்ந்த பால் கஞ்சி என்பனவற்றையும் கொடுக்கலாம்.

## இலைசேர் பால்கஞ்சி செய்யும் முறை

தேவையான பொருள்கள்

1. பச்சையரிசி - 1 கிலோ (3½ சுண்டு)
2. தேங்காய்த்துருவல் - 400 கிராம் [ஒரு முழுத் தேங்காய்]
3. ஒரு கீரை வகை - 200 கிராம் [ஒரு பிடி]
4. ஊறவைத்த பயறு - 25 கிராம் [1/8 சுண்டு]
5. சீனி - 200 கிராம் [1 சுண்டு]
6. மாஜரீன் - 50 கிராம்
7. உப்பு - சிறிதளவு

கீரை, முருங்கையிலை, துவசி, சண்டியிலை, பசளி, பொன்னாங்காணி, முளைக் கீரை, கங்குள்கீரை போன்றவை மாறிமாறிப் பயன்படுத்தலாம். முதலில் அரிசியை நன்கு வேகவைக்கவும் கீரையைச் சுத்தம் செய்தபின்னர் நன்கு கழுவி சிறுசிறு துண்டுகளாக வெட்டவும் தேங்காயைச் சிறுசிறு பூவாகத் துருவி வைத்துக்கொள்ளலாம். பயறை முதல் நாள் ஊறவைத்தால் மறுநாள் முளையும் வந்திருக்கும். அரிசி நன்கு அவிந்ததும் சீனி, கீரை, தேங்காய்த்துருவல் மாஜரீனைச் சேர்க்கவும். பின்னர் ஊறவைத்த பயறைச் சேர்க்கவும் அத்துடன் உப்பையும் போட்டு இறக்கவும். இலை சேர் பால்கஞ்சியின் போசாக்கின் தரத்தை உயர்த்துவதற்காக மேலதிகமாக பால் (பசுப்பால் மாப்பால்) என்பனவும் சேர்க்கலாம்.

(தொடரும்)

---

## இரண்டு

இரண்டாயிரம் முதலுதவிப் பெட்டிகளும், தீர்வையற்ற மலிவு விலை சிகரெட்டும் வடக்கு - கிழக்கு யுத்த முனைகளுக்கு அனுப்ப அரசு முடிவெடுத்துள்ளது.

அத்துடன் 7.00,000 மீற்றர் இராணுவச் சீருடைத் துணிகளும் யுத்த முனைகளிலுள்ள படையினருக்கு இப்போது விநியோகிக்கப்படுகிறது. பத்திரிகைகள், தொலைக்காட்சி பெட்டிகள், வானொலிகள், கழிப்பிட வசதி, குழாய்க் கிணறுகள், மற்றும் தென்னை ஓலைகளும் வழங்க நடவடிக்கைளெடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புச் செயலாளரும், பிரதம மந்திரியும் பாதுகாப்பு அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா ஒக்டோபர் 27 முதல் நவம்பர் முதலாம் திகதி வரை வடக்கு-கிழக்கு யுத்த முனைகளுக்கு விஜயம் செய்தார்கள் அப்போது முப்படையினர் செய்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஊர்க்காவற் படையினரின் சம்பள நிலுவைகளை உடன் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன் வேறு சில சாதாரண குறைபாடுகளையும் நிவர்த்தி செய்யும்படியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நடப்பு வருடமான 1992-க்கு முப்படைகளுக்கும், பொலிஸாருக்கும் என அரசு 14,057, 868.000 ரூபா ஒதுக்கியுள்ளது. இதைவிட காயமடைந்த படையினரதும், குடும்பங்களினதும் நலனைப்பேண தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து 52,830,108 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், நான்கு பஸ்கள், கண்ணிவெடி மோப்ப நாய்கள், தொடர்புச் சாதனங்கள் ஐம்பது டிராக்டர்கள் ஆகியவற்றைக் கொள்வனவு செய்வதற்காக மேலும் 5,152,412 ரூபா தேசிய பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது என்றார்.

---

## மாணவர்

படுத்தப்படவிருக்கிறது.

இரண்டு நாட்கள் மட்டும் நடைபெறவிருக்கும் மேற்படி பயிற்சித் திட்டத்துக்கென சுமார் இரண்டு இலட்சத்து 65 ஆயிரம் ரூபா மேற்படி கல்வி அமைச்சினால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

---

# கடல் வளம்சார் கல்வி சேவைக்காலப் பயிற்சி

1993 ஆம் ஆண்டு முதல் பாடசாலை மட்டத்தில் மாணவர்களுக்கு ஆண்டு 6, 7, 8 வகுப்புக்களின் விஞ்ஞானம், சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களில்கடல் வளம் சார் கல்வி அறிமுகப்படுத்தும் தீர்மானத்துக்கு அமைவாக மேற்படி பாடங்களை பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு ஒருநாள் சேவைக்கால பயிற்சி வகுப்பு எதிர்வரும் 28ஆம் திகதி மு.ப 8.30 முதல் பி.ப 4 30 வரை பின்வரும் இடங்களில் இடம் பெற உள்ளது.

யாழ்ப்பாணம், வேலணைக் கோட்டங்கள் யாழ். இந்து மகளிர் கல்லூரி; மருதனார் மடம், பண்டத்தரிப்புக் கோட்டங்கள் உடுவில் மகளிர் கல்லூரி; சாவகச்சேரி கோட்டம் சாவகச்சேரி மகளிர் கல்லூரி; பருத்தித்துறை கோட்டம் வட இந்து மகளிர் கல்லூரி.

மேற்படி வகுப்புக்களில்பங்கு பற்றுவதற்காக ஒவ்வொரு பாடசாலைகளிலிருந்தும் ஆண்டு 6, 7, 8 வகுப்புக்களில் விஞ்ஞானம், சமூகக்கல்வியும் வரலாறும் ஆகிய பாடங்களில் கற்பிக்கும் பொருத்தமான ஒவ்வொரு ஆசிரியர் வீதம் மொத்தமாக ஒரு பாடசாலையில் இருந்து இரு ஆசிரியர்களை அனுப்பி வைத்து உதவுமாறு அனைத்து அதிபர்களும் வேண்டப்படுகிறார்கள் என்பதைக் கல்வித் திணைக்களம் அறியத்தருகின்றது.

---

## உரவகை

துறையில் 461.5 மெற்றிக் தொன் மட்டுமேஇறக்கப்பட்டதாகவும் தெரியவருகின்றது

---

## புலிகளின்

குழு முன் வைத்துள்ளது.

1987ஆம் ஆண்டில் இந்திய இலங்கை ஒப்பந்தமும் போதுமானதாக இல்லை எனக்கூறி புலிகளால்நிராகரிக்கப்பட்டது

பிரேமதாசா அவர்கள் தெரிவுக்குழுவின் யோசனைகளை அமுல்படுத்தப் போவதாக கூறியுள்ளார். அவரைப் பொறுத்தவரை 1994ம்ஆண்டு தேர்தல்களில் வாக்குகள் முக்கியம். எனவே பல இனங்கள் வாழும் கிழக்குப் பகுதியில் ஏதேனும் அரசியல் முகப்பு ஒன்றை ஏற்படுத்தி தமிழர் அதிகமாக வாழும் வடக்குப் பகுதியை இராணுவம் கவனிக்கும் படி விட்டு விடுவார்.

---

# பண்ணிசைக்கு தனிப்பிரிவு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் பண்ணிசைக்கற்கை நெறி அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதற்கான ஒப்புதலைக் கலைப்பீடமும், பேரவையும் வழங்கியுள்ளன. நுண்கலைக்கழகத்தில் பண்ணிசைக்கெனத் தனிப்பிரிவு அமைக்கப்பட்டிருப்பதுடன் திரு.நா. வி.மு நவரெத்தினம் இணைப்பாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கை நிறைவேறியிருப்பது குறித்துப் பல இடங்களில் மகிழ்ச்சியும், பாராட்டுதலும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

நுண்கலைக்கழகத்தில்நான்கு பிரிவுகளாக இயங்கும் கர்நாடக சங்கீதம், வாத்தியங்கள், நடனம், பண்ணிசை ஆகியன தனித்துறைகளாக வளர்ச்சி பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# மீட்பு

சுழிபுரத்தைச் சேர்ந்த சின்னையா வடிவேலு (வயது 69) என்ற வர்த்தகரின் சடலம் கிணறு ஒன்றிலிருந்து மீட்கப்பட்டிருக்கின்றது.

ஈழநாதம்

## ஒன்றுகூடல்

(யாழ்ப்பாணம்)

இராமநாதன் நுண்கலைப் பிரிவு மாணவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்று இன்றுகாலை 9மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவில் இதுவரை காலமும் தமது கற்கை நெறிகளை முடித்து வெளியேறிய அனைத்து மாணவர்களையும் மருதனார்மடம் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் ஒன்றுகூடுமாறு கவின் கலை மன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

## சிலாபப் பகுதியிலும் பல தமிழர் கைது

(கொழும்பு)

சிலாபம் நகரத்துக்கு அண்மையில் உள்ள தமிழ்க்கிராமங்களை சிறிலங்கா இராணுவத்தினர் சுற்றி வளைத்து தேடுதல் நடாத்தி பல அப்பாவிப் பொது மக்களைக் கைது செய்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்படி பகுதியில் உள்ள கிராமங்களை நோக்கி வந்த நூற்றுக்கணக்கான சிறிலங்கா இராணுவத்தினர் கோட்டைப்பிட்டி, குசலை ஆகிய தமிழ் கிராமங்களைச் சுற்றி வளைத்தனர். இக் கிராமங்களில் உள்ள ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று தேடுதல் நடத்தினர். இத் தேடுதலின் இறுதியில் இக்கிராமங்களைச் சேர்ந்த பல தமிழ் இளைஞர்களையும் யுவதிகளையும் கைது செய்து தம்முடன் அழைத்துச் சென்றனர்

## செலவு தொகை விபரம் அரச அதிபரிடம் கோரிக்கை

1992ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டுத் தொகை பற்றிய முழுச் செலவுத் தொகை விபரங்களையும் தருமாறு யாழ். அரச அதிபர் கா. மாணிக்கவாசகரை அரசு கேட்டுள்ளது. இத் தகவலை உள்விவகார அமைச்சர் பியசிவி ரெட்ணாயக்கா தெரிவித்தார்

யாழ். குடா நாட்டிற்கு வழங்கப்படும் நிதி ஒதுக்கீடு அனைத்தும் யாழ் அரச அதிபர் ஊடாகவே வழங்கப்படுகிறது

இவ்வாண்டு மாகாண சபைகளுக்கென 11,00 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கணக்கறிக்கை இத் தொகை முழுவதும் செலவாகி விட்டது எனத் தெரியப்படுத்துகிறது.

இதேவேளை வரவு செலவுக் கணக்கறிக்கையின் பிரகாரம் வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கு இவ் ஆண்டு வழங்கப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடும் முற்றாகச் செலவு செய்யப்பட்டுள்ளது.

## புக்காரா

...யும் நாடியுள்ளது.

திடீரென்று ரஷ்யா பக்கம் சிறிலங்கா அரசு திரும்பியிருப்பது ஒரு நல்ல அறிகுறி என்று சிலர் கருதுகிறார்கள்.

ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள் மற்றும் முந்திய சோவியத் கூட்டிலிருந்த நாடுகள் சகல ரகமான ஆயுதங்களையும் விரும்பிய நாடுகளுக்குச் சந்தைப்படுத்தத் தயாராக உள்ளன. புலிகளுக்கு எதிரான அதன் போராட்டத்துக்கு ஆயுதம் கொள்வனவு செய்ய சிறிலங்கா அரசு ரஷ்யா பக்கமும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் பக்கமும் திரும்பும் என அவதானிகள் நம்புகின்றனர்.

நன்றி- ஐலண்ட்

## அஞ்சலிக் கூட்டம்

(பருத்தித்துறை)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க பருத்தித்துறைப் பிரிவின் கடற்பிராந்தியத் தொண்டர் சர்வானந்தம் பவானந்தராசாவின் மறைவையொட்டி இன்று பிற்பகல் 2 00 மணிக்கு பருத்தித்துறைபிரிவு அலுவலகத்தில் தொண்டர்களால் அஞ்சலிக் கூட்டமொன்று நடாத்தப்படவுள்ளது. (25)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**22.12.92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7189

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்; இல்லை

வட பகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

42-3114, 24-6480, 24-8785, 24-5127, 26-0691, 24-6280, 42-7995, 42-2323, 24-5623, 22-3887, 26-1169, 24-4917, 24-3258, 27-1072, 28-4672, 27-7274, 40-7584, 27-9162, 26-1495, 28-0159.

## மேஜர் முரளி பாலர் பாடசாலை திறப்பு

கொக்குவில் நாமகள் வித்தியாசாலைக்கு முன்பாக அமைந்துள்ள கட்டடத்தில் மேஜர் முரளி நினைவுப் பாலர் பாடசாலை இன்று பிற்பகல் 3.00 மணிக்கு மேஜர் முரளியின் பெற்றோர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்திறப்பு விழாவில் சிறப்பு நிகழ்ச்சியாக பாலர் கலை நிகழ்ச்சிகளும் சிறப்பு கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஆதாரம்காட்டி பெறவும்

சில ஆவணங்களுடன் பர்ஸ் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி ஈழநாதம் பணிமனையில் பெற்றுக்கொள்ளவும்.

## 'குமண' இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசியப் பொருள்களுடன் ''குமண'' கப்பல் இன்று காலை பருத்தித்துறையை வந்தடையுமெனத் தெரிய வருகின்றது.

இக்கப்பலில் 2080 மெற்றிக் தொன் மா. 855 மெற்றிக் தொன் சீனி, 300 மெற்றிக் தொன் அரிசி, மற்றும் மிகவும் குறைந்த அளவு தனியார் துறையினருக்கான உணவுப் பொருள்களும் எடுத்துவரப்படுகின்றன என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



வீரப் பிறப்பு
15-11-1976

வீரச்சாவு
09-11-1992

(09-11-92 அன்று ஆனையிறவு திடீர்மோதலில் வீரச்சாவடைந்த)

வீரவேங்கை

**அறிவழகன்**

**(இராசையா மனோகரன்)**

வாழ்வைத் தூசாக்கி
மரணத்தை நேசித்தவனே
இந்த மண் — உன்
தியாகத்தால் சிலிர்க்கின்றது
உதிரத்தால் உயிர்க்கின்றது.

- குடும்பத்தினர்

தேவிஸ் வீதி,
கனகாம்பிகைகுளம்,
கிளிநொச்சி.

(சி-5635)

## சைவ வித்தியா விருத்திச் சங்கம் — சைவச் சிறார்களுக்கு உதவுங்கள்

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு பல்வேறு உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

உதவிகளை வழங்கவிரும்புகின்ற அன்பர்கள், சரீர உதவிகளாகவும் பணமாகவும், பொருளாகவும் வழங்கி, சிறார்களது எதிர்கால நலனுக்காக பூரண ஒத்துழைப்பினை நல்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

ப. கணேசலிங்கம்
பதில் முகாமையாளர்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம்,

(சி-5637)

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
29 — 09 — 1972

மறைவு
23 — 11 — 1992

**பேரின்பநாயகம் ஜோர்ஜ் சுரேஸ்குமார்**

இப்புவி தன்னில் பொற்புடன் விளங்கிய
எங்கள் அருமை நண்பன் சுரேஸ்குமாரின்
முப்பத் தொன்றில் மூழ்கியே நாமும்
ஆத்ம சாந்திப் பிரார்த்தனை செய்து
அமலன் திருவடி தொழுது ஏத்தி
ஆராதனைகள் செய்து நிற்போம்.

வர்த்தக மாணவர் மன்றம்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

23 - 12 - 92
[3840]

## 6ஆம் மாத நினைவஞ்சலி

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



(இராசையா மனோகரன்)

வாழ்வைத் தூசாக்கி
மரணத்தை நேசித்தவனே
இந்த மண் — உன்
தியாகத்தால் சிலிர்க்கின்றது
உதிரத்தால் உயிர்க்கின்றது.

- குடும்பத்தினர்

தேவிஸ் வீதி,
கனகாம்பிகைகுளம்,
கிளிநொச்சி. (சி-5635)

## 6ஆம் மாத நினைவஞ்சலி



## லெப். மணிமாறன்

(வைத்தியநாதசர்மா ரமணானந்தசர்மா)

தாயகமண்ணில்- .2 - 04 - 1972

தாயக விடிவில்: 30 - 06 - 1992

திதி : 23-12 1992

ஆறு மாதம் உருண்டோடினும்
ஆழ்துயர் அகல்வதில்லை
படிந்ததுன் லட்சியம் - எம் மனதில்
விடியுமெம் ஈழம - வெகுவிரைவில்

அப்பா, அம்மா,
அக்கா, அண்ணா,
நண்பர்கள்.

கோண்டாவில் மேற்கு.
கோண்டாவில் (3836)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## உதவுங்கள்

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சிறுவர் நிறைவாழ்வு இல்லத்திற்கு பல்வேறு உதவிகள் உடனடியாகத் தேவைப்படுகின்றன.

உதவிகளை வழங்கவிரும்புகின்ற அன்பர்கள், சரீர உதவிகளாகவும் பணமாகவும், பொருளாகவும் வழங்கி, சிறார்களது எதிர்கால நலனுக்காக பூரண ஒத்துழைப்பினை நல்குமாறு பணிவாக வேண்டுகின்றோம்.

ப. கணேசலிங்கம்
பதில் முகாமையாளர்

சைவ வித்தியா விருத்திச் சங்கம்
கலாசாலை வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம், (சி-5637)

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



வீரப்பிறப்பு 3-05-1866

வீரச்சாவு 3-12-1988

## கப்டன் அன்பு

(பத்திநாதர் அமலராஜன்)

அன்பு அன்பு என பாசமுடன் அழைக்கப்பெற்றாயே
பண்பிலா அரக்கர் மதி கலங்கிடவே
வீர சாகஸங்கள் பல புரிந்தாயே
கொண்ட நெறிதனிலே நின்று சோர்வின்றி உழைத்தாயே

உன்னை உயிருடன் பிடிக்க எதிரி பகலிரவாய்ப்
பாடுபட்டானே
இந்திய இராணுவம் விரித்த வலைதன்னிலே சிக்காமல்
பலமுறையும் சிறகடித்தாயே
எச்சில் விழுங்கும் எட்டப்பர் சதியினால்
எதிரி வலைதனிலே விழுமுன்னே
நெஞ்சுத் துணிவினனாய் அஞ்சாது சாவை அரவணைத்து
பஞ்சு உதட்டிலே காயம் விளைத்து நஞ்சைக் கடித்தாயே
எம் இனத்தின் விடுதலைக்காய் உன்உடலை வித்திட்ட
இந்நாளில்
உம் வீரத்தை உயர்த்துகின்றோம்.

உன் தியாகத்தைப் போற்றுகின்றோம் - நெஞ்சு
தாங்காது விம்மிப் பொருமுகின்றோம்
ஆண்டவன் பால் வேண்டுகின்றோம்
அமைதி பெறுக வென்று.

ஐயா, அம்மா, சகோதரர்கள்
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

மயிலிட்டி. [3839]

தொன் அரிசி, மற்றும் மிகவும் குறைந்த அளவு தனியார் துறையினருக்கான உணவுப் பொருள்களும் எடுத்து வரப் படுகின்றன எனயாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (பா)

ஆத்ம சாந்திப் பிரார்த்தனை செய்து
அமலன் திருவடி தொழுது ஏத்தி
ஆராதனைகள் செய்து நிற்போம்.

வர்த்தக மாணவர் மன்றம்
யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சுன்னாகம்.

23 - 12 - 92
[3840]

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



## மேஜர் மணி

பொன்னையா சங்கரலிங்கம்

சப்பூர், மூதூர் - திருக்கோணமலை

மண்ணில்: 1967 - 12 - 21

எம் மனங்களில்: 1991 - 12 - 21

ஒன்றாகக் கானகத்தில் உலாவிய எம் சோதரனே
பண்பான வார்த்தைகளால் பாசத்தை ஈன்றவனே
துன்பங்கள் மறந்து தினம் துயரின்றிச் சிரிப்பவனே
ஒழுக்கத்தின் இருப்பிடமே எளிமையின் பிறப்பிடமே
ஓய்வின்றி ஓர் நாளும் விடுதலைக்காய் உழைத்தவனே
செங்களம் ஆடித் தினம் செங்குருதி சிந்தித் திரிந்த எம்பிரிய சோதரனே!
இன்றோ நீ இங்கில்லை
ஏங்குதடா எம் இதயம்
அன்று, உன் கால்கள் நடைபயின்ற
கானகத்தின் பாதையெலாம்
இன்று, உன் கால் தடங்கள் காணாமல்
ஏங்குவது தெரியுதடா.
ஒன்றாக உண்டுறங்கி
உயிர் வாழ்ந்த காலம் எங்கே
இங்கே நீயின்று இல்லையென்று
துடிக்குதடா எம் இதயம்.
ஆனாலும், தினம் உன்னை நினைக்கின்றோம்
உந்தன் நினைவுடனேதான் நாளும் வாழ்கின்றோம்.
உந்தன் இலட்சியத்தின் எல்லைவரை
ஓயாது எம் பயணம்
அந்தப் பயண வழிப் பாதையெங்கும்
தொடர்ந்து வரும் உன் நினைவு.

(சி-5636) சக போராளிகள்.